## தொல்லியல் கருத்தரங்கம் . . . .

### பயனுள்ள இருநாள்கள்.

ஆய்வாளர் நோக்கில் ஸ்தபதி வே. இராமன்.

கோவை - பண்பாட்டு ஆய்வு மையம் சார்பாக இருநாள் (டிசம்பர் 25 & 26 2010) தொல்லியல் கருத்தரங்கம் மதுரையினின்றும் நத்தம் செல்லும் பெருவழிச் சாலையில் அமைந்துள்ள செசி (CESCI) நிறுவனத்தில் நடைபெற்றது.

நகரத்தின் சுறுசுறுப்பு, ஆரவாரம், இரைச்சல் ஏதுமின்றி இயற்கையான சூழ்நிலையில், பசுமை படர்ந்த அமைதியான வளாகம் ஆய்வாளர்களை ஒன்று சேர்த்தது.

வாயிலில் தொல்லியல் அறிஞர்களை வரவேற்று வரவேற்பு பதாகை வழி காட்டியது. பசுமையான, செழுமையான மரங்கள், ஆங்காங்கே குடில்கள், நாங்கள் சிறிது தூரம் சென்றதுமே பண்பாட்டு ஆய்வு மைய இயக்குநர் தவத்திரு. சுவாமிகள் மிக எளிமையாய் காட்சியளித்து வரவேற்று ஆசி வழங்கியது ஆகியன நெஞ்சில் நிற்பவை.

அறிஞர்களுக்கு ஆடம்பரமற்ற ஆனால் தேவையான எல்லா வசதிகளுடன் கூடிய குடில்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. 25ந் தேதி காலை உணவு - சுவையான உணவு. உணவுக்கூடத்தில் தொல்லியல் அறிஞர்கள் - மாணவர்கள் - பேராசிரியர்கள் கூட உணவுக் கூடமே அரங்கமாக சலசலத்தது. மைய அலுவலர்கள் திரு. கோபாலகிருஷ்ணன் , திரு. சித்தார்த்தன் மற்றும் ஆய்வு மாணவர் திரு. கார்த்திகேயன் எல்லோரும் இனிய முகத்துடன் தேவையான உணவை வழங்கி மையத்தின் பண்பாட்டினை வெளிப்படுத்தினர்.

உணவிற்குப் பின் கருத்தரங்கக் கூட்டத்தில் அனைவரும் ஒன்று கூடினர். கூடத்தின் இருபுறமும் செப்பு பட்டயம், ஓலைச்சுவடிகள், கல்வெட்டுப்படிகள், நிழற்படங்கள், தோரணமாய் அழகுறக் காட்சியளித்தன. மாணவர்களும், ஆய்வாளர்களும் அவைகளைப் படம் பிடித்துக் கொண்டனர்.

தவத்திரு. சுவாமிகள், அகிம்சை, அமைதிக்கான அனைத்துலக நிறுவனத்தின் இயக்குநர் முனைவர். ச. செயப்பிரகாசம் அவர்களுடன் அரங்கம் வர கருத்தரங்கம் இறைவணக்கத்துடன் துவங்கியது. சுவாமிகள் அனைவரையும் வரவேற்று அறிமுக உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தம் கருத்துரையில், நமது பாரம்பரியமிக்க வரலாறு தனது அடிசுவடுகளை ஆங்காங்கே பதிப்பித்துள்ளது. அவற்றை அகழாய்வு செய்வதன் மூலம், வரலாற்றை சரியான முறையில் புரிந்து கொள்ள முடியும். நமது நாட்டின் தொன்மை மிக்க பண்பாடு பற்றி இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொண்டால் மட்டுமே வருங்கால இந்தியா வளம் பெறும். தொல்லியல் சார்ந்த ஆய்வுகளுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் ஊக்கமளிக்க உதவிடவும் ஆய்வு மையம் ஆர்வமாக உள்ளது என்றார்கள். இதனை மாணவர்கள் கரவொலி மூலம் வரவேற்றது உள்ளத்தை நிறைவு செய்வதாய் அமைந்தது.

சிறப்புரையாற்றிய முனைவர். ச. செயப்பிரகாசம் அவர்கள் நம் பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் தொல்லியல் சான்றுகள் எவ்வாறு துணை நிற்கின்றன என்பதனைச் சுட்டிகாட்டி நிறைவு செய்தார்கள்.

இக் கருத்தரங்கத்தை திரு. தி.லெ. சுபாஷ்சந்திரபோசு தலைமையேற்று நடத்தினார்கள்.

திருச்சி தேசியக் கல்லூரி பேராசிரியர் திரு. வை. இராம்குமார் அவர்கள் நேற்றைய, இன்றைய, நாளைய தொல்லியல் ஒரு கண்ணோட்டம் என்ற தலைப்பில் தொல்லியல் முக்கியத்துவம், ஆங்கிலேயர் கால தொல்லியல் என விரிவாக விளக்கினார்கள்.

அடுத்து பேசவந்த திருமதி. மங்கையர்கரசி எழுத்துப் பொறிப்புள்ள சிற்பங்கள் என்ற தலைப்பில் கி.பி. 7, 8, 9 ஆம் நூற்றாண்டு கால, தாம் கண்டறிந்த அரிய சிற்பங்களை ஒளிப்படக் காட்சிகள் மூலமாக எடுத்துக் கூறினார்கள். சிற்பங்களின் அமைதி, ஆடை, ஆபரணங்கள், ஆயுதங்கள், எழுத்துப் பொறிப்பின் செய்தி என அனைத்து செய்திகளையும் தெளிவாக எடுத்துக் கூறியது அவர்களது புலமையை வெளிப்படுத்துவதாய் அமைந்தது.

பல்லவர் கால முருகன், அய்யனார், கொற்றவை, மூத்ததேவி சிற்பங்கள் யாவும் சிற்பக்கலை வரலாற்றில் இடம் பெறத்தக்க அரிய சிற்பங்களே என்பதில் ஐயமில்லை.

தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. கி.ஸ்ரீதரன் வரலாற்று ஆய்வுக்கு அடிப்படைச் சான்றுகள் எனும் பொருளில் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், காசுகள், ஓலைச்சுவடிகள், கோயில்கள், ஓவியங்கள், விளக்குகள், இசைக்கருவிகள் மற்றும் ஆவணங்கள் எவ்வாறு ஆய்வுக்கு அடிப்படைச் சான்றுகளாக அமைகின்றன என்பதனை படவிளக்கத்துடன் விவரித்துக் கூறியது மூலம் தொல்லியல் அகழாய்வு சிறப்பினை அனைவராலும் உணர முடிந்தது.

ஸ்தபதி. வே. இராமன் தமது உரையில் கோயில்களை எழுப்பிட மனிதன் உடல் அமைப்பையே எடுத்துக் கொண்ட முறை, கோயில் உறுப்புகள், விமான வகைகள், கோபுரம் அமைப்பு என பட விளக்கத்தோடு கூறினார்.

திரு. தி.லெ. சுபாஷ் சந்திரபோசு அவர்கள் கல்வெட்டுக்களில் காணப்படும் மங்களகரமானச் சொற்களும், குறியீடுகளும் கூறும் தத்துவம் குறித்து படவிளக்கத்தோடு நீண்டதொரு உரையை தந்தார்கள். அஷ்டமங்கள சின்னங்கள், ஸ்ரீவத்சம், ஸ்வஸ்தி ஸ்ரீ, தோ குறியீடு, செவ்வக குறியீடு போன்றவற்றை படவிளக்கத்தோடு கூறியது அனைவரையும் சிந்திக்க வைத்தது.

கல்வெட்டுக்களில் புள்ளிகள் எனும்பொருள் மேலும் பட விளக்கத்தோடு கூடிய செய்திகள் யாவும் தொல்லியல் ஆய்வாளர்களுக்கு அரிய செய்திகளாக இருந்தன. இது குறித்து அறிஞர் மா. சந்திரமூர்த்தி கூறுகையில் இது பொருள் குறித்து இது நாள் வரையிலும் யாரும் முறையான ஆய்வு செய்ததாக தெரியவில்லையென்றும், நல்லதொரு படைப்பு என்றும் தம் கருத்தினை அவையில் பதிவு செய்தார்கள்.

திரு. இரா. திருமலைநம்பி அவர்கள் ஓலைச்சுவடிகள் பற்றி விவரித்தபோது ஓலைகள் தேர்ந்தெடுக்கும் முறை, எழுத்துக் கருவிகள், எழுதும் முறை, எழுதுவோரின் மாற்றுப் பெயர், பாதுகாப்பு முறை, படிக்கும் முறை என சுவடிகள் குறித்த நல்ல தகவல்களை தந்தார்கள். அதுபோல் பட்டயங்கள் பலவற்றையும் எடுத்துக் காட்டி விளக்கம் கொடுத்தது ஆய்வாளர்களுக்கு பயனுள்ளதாக அமைந்தது.

இந்நிகழ்ச்சிகள் குறித்து மாணவ மாணவிகள், ஆய்வாளர், பேராசிரியர்களிடம் அவைத்தலைவரால் கருத்து கேட்கப்பட்டது. கல்லூரியில் அறியமுடியாத பல செய்திகளை இவ்வரங்கத்தில் அறிய முடிந்தது என்றும், பயனுள்ள கருத்தரங்கம் என்றும் கூறினார்கள். மேலும் இதற்கென தனி பயிற்சி தந்தால் நல்லது என ஸ்ரீ சுவாமிகளிடம் கோரிக்கையை வைத்தனர் மாணவர்கள்.

மாணவர்களின் ஆர்வத்தை அறிந்த தவத்திரு. ஸ்ரீ சுவாமிகள் அறிஞர்களை ஒன்று கூடச் செய்து, மாணவர்களின் கருத்தினை கேட்டறிந்தார்கள். மாணவர்கள் நலன் கருதி ஒரு வருட பயிற்சியாக அஞ்சல் வழி கல்வி மூலம் பயிற்றுவிக்கலாம் எனவும், அறிஞர்கள் மா.சந்திரமூர்த்தியும், திரு.கி.ஸ்ரீதரனும் இதற்கான பாடத்திட்டத்தை தயார் செய்து தருமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. பிற அறிஞர்களும் இதனை ஏற்றுக் கொண்டார்கள்.

ஸ்ரீ சுவாமிகளின் தொலைநோக்குப் பார்வையை அறிஞர்கள் பாரட்டினார்கள். இரவு நெருங்க இனிய உணவிற்கு பின் லோசான குளிரில் இதமான உறக்கம் மேற்கொள்ளப்பட்டது.

26-12-2010 ஞாயிறு காலை 9.00 மணியளவிலேயே அரங்கம் துவங்கிவிட்டது. திரு. தி.லெ.சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் திரு. இரா. திருமலைநம்பி, 'திருப்புனவாசல் ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவினை தந்தார்கள். இந்த ஊரை நல்ல முறையில் ஆய்வு மேற்கொண்டால் பல அரிய செய்திகள் வரலாற்று வெளிச்சத்திற்கு வரும் என அறிஞர் கி.ஸ்ரீதரன் கருத்து தெரிவித்தார்கள்.

அறிஞர் கி. ஸ்ரீதரன் அகழாய்வு நெறிமுறைகள் குறித்து பட விளக்கத்தோடு அகழாய்வு இடம் தேர்வு முறை, கையாளும் முறைகள், பொருள்களை எவ்வாறு சுத்தம் செய்வது, எங்ஙனம் பதிவு செய்தல், காலக் கணிப்பு காண்பது எவ்வாறு? அகழாய்வு நடந்த இடங்கள் என விரிவாக எடுத்துச் கூறினார்கள். பயனுள்ள நல்லதொரு சொற்பொழிவு.

அறிஞர் மா. சந்திரமூர்த்தி சுவர் ஓவியங்கள் குறித்து சிறந்த சொற்பொழிவினை பட விளக்கத்தோடு கூறியது அனைவரையும் கவர்ந்தது. முற்கால சோழர் கால ஓவியம், சித்தன்ன வாயில் ஓவியம், மதுரை அழகர் கோயில் ஓவியங்கள் என எடுத்துக் கூறி ஓவியங்களின் காலம், அப்போது நிலவிய சமுதாய நிலை, பயன்பட்ட ஆடை, அணிகலன்கள், ஓவிய அமைதி, ஓவியத்தின் வளர்ச்சி, மாற்றம் என தெளிவாக எடுத்துக் கூறியது பயனுள்ள நல்ல கருத்தாக அமைந்தது. இடையிடையே தேவையான இடங்களில் இலக்கியச் சான்றுகளோடு எடுத்துக் கூறிய அவர்களது புலமை, அனுபவம், சொல்லாற்றல் யாவும் அவையை மகிழவைத்தன.

நடுநாட்டில் வட்டெழுத்து நடுகற்கள் எனும் பொருளில் திரு. சி. வீரராகவன் பேசினார். அவரது கணீர் பேச்சு அவையை கவர்ந்தது. கண்டறியப்பட்ட நடுகற்களில் பல்லவர் கால நடுகற்கள் வரலாற்றில் இடம் பெற தக்கதாகும். பட விளக்கங்களோடு சிற்பங்களின் தன்மை, வெளிப்படுத்தும் கருத்து, கல்வெட்டு பாடம் போன்றவற்றை மிகத் தெளிவுபட எடுத்துக் கூறியது அவர்களது புலமை, தெளிவை எடுத்துக் காட்டியது. நடுகற்கள் அத்தனையும் மிக அருமை. அனைவரையும் வியக்க வைத்தது என்றால் மிகையல்ல.

ஸ்தபதி. வே. இராமன் உத்தம சோழர் கால கோயில் ஒன்றினை படவிளக்கத்தோடு விவரித்தார். கோயில் உறுப்புகளான உபபீடம், அதிட்டானம், பாதச்சுவர், பிரஸ்தரம், தூண்கள் அமைப்பு, தோரணம், கோட்டங்களில் இடம் பெறும் சிற்பங்கள், கல்வெட்டு தரும் செய்திகள் முதலானவற்றை விரிவாக எடுத்துக் கூறினார்.

மேலும் பேசும் பொழுது மாணவர்கள் கோயிலின் எந்த உறுப்பினையும் எடுத்து ஆய்வு செய்யலாம், ஏராளான தரவுகள் கோயில்கலையில் உள்ளதென்றும், கோயில்களை பாதுகாப்பதன் மூலம் நம் வரலாறு பாதுகாக்கப் படுகின்றது எனவும் தெரிவித்தார்.

பேராசிரியர் வை.இராம்குமார் பெருங்கற் சின்னங்கள் குறித்த பட விளக்கமாகத் தந்தார்கள். இவைகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளதென்றும் அகழாய்வு செய்யப்படவில்லை என்றும் கூறினார்கள். வட்டமான வடிவம், நீள் சதுர வடிவம், தடுப்புள்ள வடிவம் என பல வகையான பெருங்கற் சின்னங்களை விவரித்தார்கள். இதனை அகழாய்வு செய்வதால் பல நல்ல தகவல்களை பெறலாம் என அவையோர் கருத்து வெளிப்படுத்தினார்கள்.

ஒரு நாட்டில் வரலாற்றை எழுதிவிட இன்றியமையாத சான்றுகளை வழங்குபவை இலக்கியங்களும், தொல்லியல் சான்றுகளேயாகும். சிந்து சமவெளியில் கிடைத்த தொல்லியல் தடயங்கள் நம் பண்பாடு, நாகரிகத்தை வெளிப்படுத்துகின்றன.

இலக்கியம், அரசியல், சமயநிலைகள், சமுதாயம், பொருளாதாரம், வாழ்வியல் முறைகள், கலைகளின் வளர்ச்சி என அனைத்துச் செய்திகளையும் தருவன தொல்லயல் சான்றுகளேயாகும். இத்தகைய தொல்லியல் சான்றுகளை வெளிப்படுத்துவனாக இருப்பது கல் எழுத்துக்களேயாகும்.

இத்தகைய எழுத்துக்களை கொண்ட வரலாற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வரவே பண்பாட்டு ஆய்வு மையம் தொல்லியல் கருத்தரங்கத்தை தொல்லியல் அறிஞர்களைக் கொண்டு நிகழ்த்தியுள்ளது என்பதனை இருநாள் கருத்தரங்கம் உணர்த்தியது.

மாணவர்கள் கேட்ட ஐயப்பாடுகளுக்கு அவ்வப்போது தவத்திரு. சுவாமிகள் விளக்கம் தந்ததும், இருநாள் உடனிருந்து அன்புடன், கனிவுடன் உபசரித்ததும் மகிழ்ச்சியைத் தந்தது. தொல்லியல் அறிஞர்களுக்கு நினைவுப்பரிசும், கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டன.

ஆய்வு மையத்தில் கலந்து கொண்டு பதிவு செய்த அனைவருக்கும் அகழ்வாராய்ச்சிகள் காட்டும் தமிழக வரலாறு புத்தகமும், அறிஞர் பெருமக்களின் ஆய்வுச்சுருக்கமும், தகவல் கையேடும், குறிப்பு அட்டை, எழுதுகோல் தரப்பட்டன.

தவத்திரு. சுவாமிகளுக்கு பொன்னாடையும் நினைவுப் பரிசும் திருச்சி பண்பாட்டு ஆய்வு மையம் சார்பாக தரப்பட்டு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சுவாமிகள் எல்லோருக்கும் ஆசியுரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.

இயற்கையான சூழலில் , அமைதியாக கல்லெழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சிற்பங்கள் அகழாய்வுக்கு அடிப்படைச் சான்றுகள், அகழாய்வு நெறிமுறைகள், பாண்டிய நாட்டு சுவர் ஓவியங்கள் திருக்கோயில் கட்டுமானமும் உட்கூறுகளும் சோழர் கால கற்கோயில் கட்டுமான அமைப்பு நேற்றைய - இன்றைய - நாளைய தொல்லியல், பெருங்கற் சின்னங்கள், வட்டெழுத்து நடுகற்கள், ஓலைச் சுவடிகள், திருபுனவாசல், கல்வெட்டுகளில் காணப்படும் புள்ளிகளும், தத்துவங்களும் எனும் தலைப்புகளில் பெறபட்ட வரலாற்றுச் செய்திகளும், முனைவர். ச. செயப்பிரகாசம் அவர்களின் சிறப்புரையும், தவத்திரு. சுவாமிகளின் உரைகளும் நெஞ்சில் நிற்க அனைவரும் பிரியாவிடை பெற்றது வரலாற்றில் இடம் பெறத் தக்க நிகழ்வுகளே.

ஆய்வாளர்கள், மாணவர்கள் அனைவரும் தங்குவதற்கும் உணவுக்கும் ஏற்பாடு செய்த செசி நிறுவனத்திற்கு நன்றி கூறப்பட்டது.

நல்ல முறையில் விளம்பரம் மற்றும் செய்திகள் வெளியிட்டு உதவிய தினமலர் நாளிதழ் மற்றும் பிற நாளிதழ்களுக்கும் நன்றி கூறப்பட்டது.